செ.வெ.எண்: 766/2016 நாள்: 28.10.2016

# பத்திக்கை செய்தி

தமிழ்நாட்டில் இயக்கப்படும் ஆம்னி பஸ் கட்டணம் குறித்து கடந்த 19ந்தேதி மதுரை உயர்நீதிமன்ற கிளையின் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளதை அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் 2015-2016 ஆண்டில் ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்திருந்த கட்டணத்தையே இந்த தீபாவளி பண்டிகைக்கும் 27-ம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை பயணிகளிடம் வசூலிக்க வேண்டும்.

அது போன்று தீபாவளி பண்டிகை காலமல்லாத மற்ற நாட்களிலும், இம்மாதம் 26-ம் தேதி வரை மற்றும் நவம்பர் 1-ம் தேதி மேற்பட்ட சாதாரண நாட்களிலும் 2015-2016 ஆண்டில் ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்த கட்டணத்தையே வசூலிக்க வேண்டும். 27-ம் தேதியில் இருந்து 31-ம் தேதி உட்பட்ட பண்டிகை கால டிக்கெட்களை பயணிகளிடம் ஆம்னி பஸ் நிர்வாகம் வசூலித்திருந்தால், பஸ்சில் அந்த பயணி ஏறும் நேரத்தில் கூடுதல் கட்டணத்தை திருப்பித் தர வேண்டும். இந்த உத்தரவுகள் மீது விதிமீறல் இருப்பின் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் மீது உரிய சட்ட நடவடிக்கை காவல் துறை / வட்டார போக்குவரத்து துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்படும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.